பங்கசுனி எட்டு

Registered as a Newspaper

பிரயாணிகளுக்கு!
வசதியான தங்குமிட
ஒழுங்குகள்!
'பேல்லா காஸா'
விடுதி அறைகள்
176, மவுண்
கார்மேல் வீதி,
(பிரதம தபாற் கந்தோர்
எதிராக)
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

உணவு வசதியுடன்
தங்குமிட ஏற்பாடுகள்!
BELLA CASA
BOARDING
&
LODGING
126, மவுண்
கார்மேல் வீதி,
(பிரதம தபாற் கந்தோர்
எதிராக)
யாழ்ப்பாணம்.

மலர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 29 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் 4 (14 - 12 - 1988) UTHAYAN-A lively Tamil Daily இதழ்: 17

துப்பாக்கிப் பிரயோகம் — ஷெல்லடிகள்

# திருமலை அசம்பாவிதத்தில் 11 பேர் மரணம்!

## ஸ்ரீலங்கா இராணுவதரப்பிலும் மூவர் பலி!!

யாழ்ப்பாணம், டிசம்பர் 14

திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவங்களின் போது 11 பேர் கொல்லப்பட்டனர்.

13 பேர்வரை காயம் அடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பிலும் மூவர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

கடந்த 10 ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

சம்பவங்கள் பற்றிக் கூறப்படுவதாவது—

கடந்த 10ஆம் திகதி மாலை 6.00 மணி அளவில் திருகோணமலை மட்டக்களி என்னும் இடத்தில் ஸ்ரீலங்காப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது பாலசிங்கம் பிரேமச்சந்திரன் என்பவர் மரணம் அடைந்தார்.

இறந்தவரின் இறுதிச் சடங்குகள் நேற்று முன் தினம் 12-ஆம் திகதி திருமலை இந்து மயானத்தில் இடம்பெற்றன.

அதே தினம் மடத்தடி ஸ்ரீ லங்கா இராணுவ முகாம் அருகில் சென்ற இரு தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் முகாமுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு பொது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படை தளபதி கல்கத் கொழும்பில் பேச்சுவார்த்தை

கொழும்பு, டிச 14

இந்திய அமைதிப் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்றுக் கொழும்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருடன் பேச்சுக்கள் நடத்தினர்.

திருகோணமலை நகரில் நடந்த மோதல் சம்பவம் குறித்து இப் பேச்சுக்கள் அமைந்ததாக பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

திருமலைச் சம்பவம் பற்றி முரண்பாடான தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்று தெரிவித்த பி. பி. சி. அது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையில் உள்ள இலங்கை இராணுவ முகாம் அருகே வான் ஒன்றில் வந்த சிலர் இலங்கை இராணுவ முகாமினுள் பெற்றோல் குண்டு ஒன்றையும் கிரனேட் ஒன்றையும் வீசினராம்.

அதைத் தொடர்ந்து இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். அதைத் தொடர்ந்து வானில் வந்தவர்கள் அருகில் இருந்த இந்திய அமைதிப் படை முகாமுக்குள் சென்றனராம்

இதை அடுத்து ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். இந்திய அமைதிப் படை ஜவான் ஒருவரும் இதில் உயிரிழந்தார். மூன்று இலங்கை இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நடந்த சமயத்தில் லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் திருகோணமலையில் இருந்தார்.

இரு தரப்பினருக்கும் இடையே பதற்றைத் தணிப்பதில் அவர் திருமலையில் உள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பேசினர்.

பின்னர் அவர் கொழும்பு திரும்பி இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருடன் இச் சம்பவம் குறித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இப்படி பி. பி. சி. வானொலி நேற்று இரவு தெரிவித்தது. (ஒ-எ)

முச்சந்தி முரளி



தாட்சர் அம்மையாரும் காலைவாரி விட்டார் போல!

## அன்னை திரேஸா ஆர்மேனியா செல்வார்

ரோம் டிச 14

நோபல் சமாதானப் பரிசு பெற்ற அன்னை திரேஸா பூமியதிர்ச்சிக்குள்ளான சோவியத் யூனியன் மாநிலமான ஆர்மேனியா செல்கிறார்.

முதலில் ரோம் செல்லும் இவர், அங்கு இருந்து வேறு நான்கு கிறிஸ்தவ சங்கைக்குரிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பியினரை அடக்குவதற்கு

## கூர்க்கா படையை அனுப்ப பிரிட்டிஷ் அரசு மறுப்பு!

லண்டன், டிச, 14

ஜே. வி. பி தீவிரவாத இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஹொங்கொங்கில் உள்ள கூர்க்கா படையினரை அனுப்பி உதவும்படி பிரிட்டனுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்க பிரிட்டிஷ் அரசு சண்ணியமாக மறுத்துவிட்டது என்று லண்டனில் இருந்து நேற்று வெளியான பினான்ஷியல் டைம்ஸ், கார்டியன் ஆகிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. (ஒ-எ)

பிரதமர் வந்த நாளன்று

## வவுனியாவில் குண்டு வெடித்தது!

வவுனியா, டிச 14

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச வவுனியாவுக்கு விஜயம் செய்த நாளான கடந்த திங்கட்கிழமை காலை 11. 30 மணியளவில் நகரில் பெரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

கூட்டம் நடைபெற்ற பொலீஸ் நிலைய மைதானத்தில் இருந்து சுமார் 150 யார் தூரத்தில் உள்ள அரச ஊழியர் விடுதி ஒன்றின் அருகிலேயே குண்டு வெடித்தது.

அதற்கு மிகச் சமீபமாக நீதிமன்ற வீதியில் பொலீஸாரும் பொதுமக்களும் நின்றிருந்தபோதிலும் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

குண்டு வெடிப்புச் சத்தத்தை அடுத்து நகரில் பதற்ற நிலை ஏற்பட்டு சிறிது நேரத்தில் அமைதி நிலவியது

குண்டு வெடிப்பு நேரத்தின் போது கூட்டம் ஆரம்பித்திருக்கவில்லை.

இதேவேளை பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவின் வவுனியா வருகையையொட்டி, நகரின் பல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மா வந்து சேர்ந்தது; இன்று விநியோகம்

யாழ்ப்பாணம் டிச 14

950 மெட்ரிக் தொன் கோதுமை மாவை ஏற்றிக் கொண்டு 'கடவத்தை' என்ற கப்பல் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த மாவை கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பதற்கான வழங்கல் கட்டளைகள் இன்று (14-ஆம் திகதி) காங்கேசன்துறையில் வழங்கப்படும்.

இதேவேளையில், 300 மெட்ரிக் தொன் அரிசி நாளை (15-ஆம் திகதி) கொழும்பிலிருந்து ரயில் மூலம் இங்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ ஐ 10)

## வெலிக்கடைச் சிறையில் குண்டு வெடிப்பு!

### 30 தீவிரவாதிகள் தப்பினர்

கொழும்பு, டிச 14

வெலிக்கடைச் சிறையில் நேற்று பெரிய சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது.

அதனால சிறையின் சுவரில் பெரிய துவாரம் ஒன்று ஏற்பட்டது.

அதனூடாக 30 ஜே வி. பி. சந்தேக நபர்கள் சிறையில் இருந்து தப்பிச் சென்றனர்.

அவர்கள் சிறைக்கு வெளியே தயாராகக் காத்து நின்ற பஸ் ஒன்றில் ஏறித் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறைச்சாலைப் பகுதியில் சுமார் இரண்டு மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் நீடித்ததாகஅப் பகுதிவாசிகள் தெரிவித்தனர் என்று பி பி சி நேற்று இரவு அறிவித்தது.

அப்போது இரண்டு பேர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து சிறைச்சாலையின் ஒரு பிரிவில் தீப்பிடித்தது.

இராணுவத்தினர் வெலிக்கடைப் பிரதேசத்தில் போக்குவரத்து. நடமாட்டங்களை முற்றுகத் தடைசெய்தனர்.

நேற்று கொழும்பு நகரில் இன்னொரு குண்டு வெடிப்பும் இடம்பெற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மின் விநியோகம் பாதிக்கப்படும் ஆபத்து

யாழ்ப்பாணம், டிச 14

யாழ் மாவட்டத்தில் சட்டவிரோத மின் பாவனை அதிகரித்து வருகின்றது இதனால் தற்பொழுது பகுதி பகுதியாக வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோகம் பாதிக்கப்படலாம்.

— இவ்வாறு மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனரேட்டர்கள் மூலம் பகுதி பகுதியாக மின்சாரம் வழங்கப்பட்டு வரும் இவ்வேளையில் சிலர் திருட்டுத்தனமாக கம்பிகளை இணைத்து சனரக தொழிற்பாடுகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

இதனால் மின்தடை ஏற்படுவதுடன் மின்சார விநியோக ஒழுங்கும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலை தொடருமானால் மின்சார விநியோகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவது தடைப்படலாம் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-5)

## இன்றுமுதல் இரவு 9மணிக்கு ஊரடங்கு அமுலுக்கு வரும்

### மீன்பிடி நேரத்திலும் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச, 14

யாழ். மாவட்டத்தில் இன்று புதன்கிழமை முதல் ஊரடங்குச் சட்டம் இரண்டு மணித்தியாலங்களால் தளர்த்தப்படுகிறது

இன்று இரவு 9மணிக்கே ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வரும். வழமையான நேரமான காலை 5 மணிக்கு அது தளர்த்தப்படும்.

அதேவேளை குடாநாட்டு மீனவர்கள் அதிகாலை 2 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை கடலில் தொழில் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவை மறுஅறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று இந்திய அமைதிப் படையின் யாழ் நகரக் கொமாண்டன்ட் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ)

## தென் பகுதியில் நேற்று 17 பேர் சுட்டுக்கொலை

கொழும்பு, டிச. 14

தென்பகுதியில் நேற்றுக் காலை 17 பேர் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

மாத்தறையில் நேற்று பத்துப் பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

7 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை; உயிரிழந்த அனைவரும் ஜே. வி. பி. உறுப்பினர் என்று கூறப்படுகிறது, (ஒ-எ)

### விரிவுரைகள் நடைபெற்றன

யாழ்ப்பாணம், டிச 14

யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று விரிவுரைகள் நடைபெற்றன;

கடந்த 7 ஆம் திகதியின் பின்னர் நேற்றைய தினமே முதன்முதலாக விரிவுரைகள் நடைபெற்றன. (ஒ-5)

## தமிழக சட்டசபைத் தேர்தல் ஜனவரி 21இல்

சென்னை, டிச 14

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் ஜனவரி 21 ஆம் திகதி நடைபெறும்.

புதுடில்லியில் தேர்தல் கமிஷன் அதிகாரி ஒருவர் இதனை வெளியிட்டார்.

மிஸோராம், நாகலாந்து மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களும் 21 ஆம் திகதி யன்றே இடம்பெறும்.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் கமிஷன் இம்மாதம் 19 ஆம் திகதி வெளியிடும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஒ எ)

## வேலைக்குத்திரும்ப உத்தரவு

கொழும்பு, டிச 14

சகல அரசாங்க ஊழியர்களும் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று பொது நிருவாகத்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு நேற்று பிற்பகல் 2 மணி முதல் அமுலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

வேலைக்குத் திரும்பாதோர் வேலை இழந்தவராகக் கருதப்படுவர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### சுபநேரம்

14-12-1988
கார்த்திகை 29
புதன்கிழமை
சுப நேரம்:
4 51முதல் 6.21 வரை
ராகு காலம்:
12 21முதல் 1.51வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
விநாயக ஷஷ்டி விரதம்

யாழ் மாவட்டத்துக்கான

## ஏழரைக்கோடி ரூபா வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச 14

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணமாக வழங்குவதற்கென கடந்த ஆறும் திகதி ஒதுக்கப்பட்ட ஏழரைக் கோடி ரூபா யாழ்மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி நிவாரணக் கொடுப்பனவுக்கென ஏற்கனவே அரசாங்கம் ஏழரைக்கோடி ரூபாவை ஒதுக்கித் தந்திருந்தது தெரிந்ததே.

இதே வேளையில் மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள பதினைந்து கோடி ரூபாவையும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இந்த வருட இறுதிக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலகம் தற்போது முடுக்கிவிட்டிருக்கிறது. (ஒ-ஐ-10)

### காயத்துடன் இளைஞர்

யாழ்ப்பாணத்தில் முத்திரைச் சந்திக்குச் சமீபமாக நேற்று அதிகாலை 5. 30 மணியளவில் இளைஞர் ஒருவர் தலையில் காயத்துடன் கிடக்கக்காணப்பட்டார். (ஒ)

விநாயகர் ஸ்ரோர்ஸ்

★ திறப்பு விழா ★

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
"விநாயகர் ஸ்ரோர்ஸ்"
பலசரக்குக் கடை
இன்று புதன்கிழமை
14-12-1988 பிற்பகல் 6-00 மணி
அளவில் திறந்துவைக்கப்படும்.
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் திறப்பு விழாவில்
கலந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன்
வேண்டுகின்றேன்.

க. சண்முகமூர்த்தி
(உரிமையாளர்)

அச்செழு,
நீர்வேலி வீதி,
நீர்வேலி. (8132)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

பாவித்த தளபாடங்கள் கட்டில், Box Spring மெத்தைகள், மகாராஜா ஹோல் செற், Show Case, கண்ணாடி மேசை, செற்றி, சாப்பாட்டு மேசை, நேசறி Cot, பெரிய குத்துவிளக்கு, Filter, மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, சென் பற்றிக்ஸ் சந்தி அருகில் யாழ்ப்பாணம். (8097)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கோல்செற், செற்றி, Show-Case, கண்ணாடி மேசை, மேசைகள், Baby-Cot, கட்டில் மெத்தைகள், மற்றும் பல பொருட்கள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. திரு மதியாபரணம், 158, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (8116)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரசி ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/357)

### கோழிக்குஞ்சு

## விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

## இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

## சிகிச்சை

நோயாளர் நலன் கருதி சனிக்கிழமைகளில் மட்டும் சகல நாட்பட்ட நோய்களுக்கும் ஆலோசனை, சிகிச்சை பெறலாம். ஜெயந்தி கிளினிக், தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (8038)

## WANTED BRIDEGROOM

Jaffna Vellala hindu engineer, brothers (U K. Australia) seeks a qualified bridegroom (Engineer. Accountant. Science Graduate) for youngest vegetarian, slim A L qualified good looking sister 24yrs. Dowry house and cash Local or Foreign currency Send horoscope with details 406, C/o Uthayan (8215)

## தவறிவிட்டது

நாகேந்திரம் மகேஸ்வரி ஆகிய எனது அடையாள அட்டை இல: 298330954 V யாழ் Town இல் 4-11 88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8117)

## புத்தகம்

க. பொ. த. (உ. த) பிரயோக கணித காவியும் அதன் பிரயோகங்களும் ஆகிய படிமுறைப் பயிற்சிநூல் வெளிவந்துவிட்டது. பல புதிய வினாக்கள் உட்பட 125 வினாக்களைக் கொண்ட புதிய வெளியீடு இதுவாகும். யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு மட்டக்களப்பு ஆகிய நகரங்களிற் கிடைக்கும். ஆசிரியர்;- சி. துரையப்பா, St John's College, Jaffna. (8213)

## வகுப்புக்கள்

கேக், ஐசிங், ஜெனரல் குக்கரி வகுப்புக்கள், பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோர்க்கும் இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். காலம்: 2 மாதம். ஆரம்பம்: 14-12-1988. தொடர்பு: Arullananda, 11/2, வைமன் வீதி, நல்லூர். (C 838)

## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70 க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (Job Categories) உயர் தொழில் முதல் சிறுதொழில் வரை. 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும். கட்டணம் எதுவுமில்லை. நீங்களே உங்கள் வெளிநாட்டுத் தொழிலதிபருடன் தொடர்பு கொண்டு உங்கள் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக் கொள்ள முதலில் சுயவிலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

**Foreign Assignments,**
**Chunnakam,**

(8267)

## அறிவித்தல்

வட இலங்கை சந்தைப்படுத்தல் அலுவலார் சங்கம் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளது பின்னர் திகதி அறிவிக்கப்படும் (8253)

## 40-ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
மேரி திரேசா சந்தியாப்பிள்ளை

தோற்றம்: 1- 4- 1923
மறைவு: 4- 11- 1988

அன்புத் தாயே!

எல்லோருக்கும் நீங்கள் ஒரு நிழல்மரம்
உங்கள் நிழலிலே ஆறுதல் பெற்றோம்
காலமெல்லாம் இங்கு வாழ்ந்து எமக்கு
காவல் தெய்வமாய் இருந்த நீங்கள்
பெற்ற பிள்ளைகளுக்கும் துணைவருக்கும்
பிரியாவிடை கூறுவதற்கோ
மெல்போனில் சென்று விடைபெற்றீர்கள்
எமக்கு மட்டுமன்றி அறிந்தவர் அனைவர்க்கும்
அம்மாவாய் இருந்தீர்கள் - அதனால்தான்
பிரிவுத்துயர் பிரியாது வதைக்கிறது
வாழும்போது பிறர்க்காகவே வாழ்ந்ததாயே
வான் வீட்டிலும் எம்மை மறக்காதீர்கள்!

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் 14- 12 1988 புதன்கிழமை காலை 10. 30மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் பங்குகொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாட அழைக்கின்றோம்.

சுவாமி மரிய செபஸ்ரியன் அ. ம. தி.
லிசிய இல்லம்
இளவாலை. (C/919)

நெடுந்தீவில்

# குருக்கள் குடும்பத்துக்கு ஏற்பட்ட அனுபவம்

நெடுந்தீவு, டிச 14

நெடுந்தீவு மேற்கு இராமச்சந்திர சர்மாவின் வீட்டிலிருந்து சுமார் ரூபா ஐம்பதினாயிரம் பெறுமதியான நகைகளும் இதர பொருள்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வீட்டுக்குச் சென்ற இளைஞர்கள் மூவர் வீட்டில் இருந்த குருக்களையும் அவரது குடும்பத்தினரையும் அழைத்து "உங்கள் வீட்டில் ஆயுதங்கள் இருக்கின்றதாக அறிகின்றோம் நாங்கள் வீட்டைச் சோதனையிட வேண்டும் நீங்களாகவே வீட்டில் இருக்கும் பொருள்களை ஒரேஇடத்தில் எடுத்துப் போடுங்கள் நாங்கள் பார்த்துவிட்டுச் செல்கின்றோம்" என்று கூறினராம்.

வீட்டில் இருந்தவர்கள் நகைகள் உட்பட எல்லாப்பொருள்களையும் ஒரே இடத்தில் எடுத்து வைத்தனர்.

அத்துடன் ஒரு சிறிய உண்டியல் பேணியையும் பார்த்துவிட்ட அவர்கள் அதனையும் எடுத்து வைக்குமாறு கூறினர். பின்பு எல்லாப் பொருள்களையும் மூடையாகக் கட்டிக் கொண்டு எடுத்துச் சென்றுவிட்டனர் என்று சொல்லப்படுகிறது. [இ-ச-111]

## அரசாங்க அதிபருக்கு நன்றி

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக யாழ் அரசாங்க அதிபருக்கு ஆழியவளை கிராம அபிவிருத்திச் சங்கம் தமது பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளது. (ச-144)

## சீட்டிழுப்பு பின்போடப்பட்டது

கடந்த நவம்பர் 19 ஆம் திகதி யாழ் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு தவிர்க்க முடியாதகாரணத்தினால் ஜனவரி 19 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது

# ஓமந்தைப் பகுதியில் அடிக்கடி கொள்ளை!

வவுனியா, டிச 14

ஓமந்தையின் சில கிராமப் பகுதிகளிலும், மாறம்பைக்குளம் கிராமப் புறங்களிலும் வைரவப் புளியங்குளம் பகுதியிலும் முகமூடி அணிந்தவர்கள் கொள்ளைகளை நடத்தி வருவதாசக் கூறப்படுகிறது.

குறிப்பாக, ஓமந்தைப் பகுதியில் உள்ள சில கிராமங்களிலேயே கொள்ளைகள் அடுத்தடுத்து இடம்பெற்று வருகின்றன.

சாதாரண கூலித்தொழில் செய்பவர்களின் வீடுகளில்கூட கொள்ளையர்கள் புகுந்து ஆயுதங்களைக் காட்டி மிரட்டி, பெண்கள், பிள்ளைகள் அணிந்துள்ள சிறு நகைகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் முதல் அனைத்தையும் அபகரித்துச் செல்வதாகக் கூறப்படுகிறது (ஓ-164)


+
J. M. J.

# அடுத்த இரண்டு வாரங்களுக்குள்

CANADA

# கனடா பயணம்!

ஆச்சரியம்தான்; ஆனால் இது உண்மை!

இவ்வருடத்தில்
கனடாவுக்கான எமது இறுதிக்குழு இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கையை விட்டுப் புறப்படவிருக்கிறது.
இக்குழு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கண்டிப்பாகக் கனடாவில் கொண்டாடும் என்று
★ உறுதியுடனும் மகிழ்வுடனும் அறியத் தருகின்றோம்! ★

எனவே,
உங்கள் வாழ்வை வளம்படுத்துவதற்கான
இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முந்துங்கள்!

மேலும் விபரங்களுக்கு
உடனே
நேரில் வருகை தருமாறு ★ அன்புடன் அழைக்கின்றேன். ★

உங்கள் பயண அமைப்பாளர்: **எஸ். பி. அன்ரன்**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C-487)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

**பொருள்:**
செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்

உதயன்
உண்மை - அஞ்சாமை - ஆக்கம்

இல - 898/8 நாவலர் வீதி தொலைபேசி 84605, 82078
யாழ்ப்பாணம் உ. பெ. இல 88
14-12-1988

# பிரதேச நலன் பிரதானம்

எமது பிரதேசத்தில் சுமார் 500 கிராமங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன அவற்றை முன்னேற்றுவதற்கு அந்தப் பகுதி மக்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவது அவசியம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு மட்டும் கல்வி புகட்டும் கல்விக் கூடமாக இயங்காமல், வெளிவாரியாகவும் பாடம் புகட்டக் கூடியதாக அமைய வேண்டும்.

இந்த வகையில் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்வித்துறை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கருத்தும், தகவலும் வெளியிட்டுள்ளார்.

பல்கலைக்கழகம் வெறும் பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் உயர்கல்வி நிலையமாக மட்டும் இருக்கக்கூடாது. உயர்கல்வி வசதி செய்வது மட்டுமே அதற்குள்ள சமூகப்பணி என்றும் நினைத்துவிடல் ஆகாது.

உயர்கல்வி வசதி அளிப்பதோடு, அது அமைந்துள்ள பிரதேசத்தின், சமூகத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பணியாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் பல்கலைக்கழகத்துக்கு உண்டு.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் ஆய்வுகளை நடத்துதல் தரவுகளைச் சேகரித்தல், பயிற்சிகளை நடத்துதல் ஆகிய பணிகளிலும் பல்கலைக்கழகம் ஈடுபடுதல் அவசியம்.

உதாரணமாக இப்பிரதேசத்தின், பூகோள, பூகர்ப்பவியல் சூழ்நிலைக்கு ஏற்ப புதிதாக ஆரம்பிக்கப்படக்கூடிய விவசாய கைத்தொழில் துறைகளை இனங்காணுதல், அதன் பொருட்டு எங்கள் வளங்களின் உரிய பயன்பாடுகளைக் கண்டறிதல், அவற்றைப் பாவித்துப் புதிய தொழில் துறைகளை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியங்களைத் தெரிவித்தல், அவை சம்பந்தமான தரவுகளைத் தயாரித்தல், இப்போது பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை, கைத்தொழில் என்பவற்றை விருத்தி செய்வதற்குத் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து சிபார்சு செய்தல், புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பாரம்பரியமான பாடப்புத்தகக் கல்வி நெறிக்குப் புறம்பாக, பிரதேச நலனுக்கு உதவும் புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டாலே, பல்கலைக்கழகம் தான் அமைந்துள்ள பிரதேசத்துக்கும், தான் சார்ந்துள்ள மக்களுக்கும் உதவ முடியும்; பணி செய்ய முடியும்

சமூக,பொருளாதாரத் துறைகளின் விருத்திக்கு உதவக்கூடிய வெளிவாரிக்கல்வி நெறிகள் பிரதேச முன்னேற்றத்துக்குப் பெருமளவில் உதவும்; நன்மை பயக்கும். தலைமைத்துவப் பயிற்சி, தொண்டர்பயிற்சி ஆகிய துறைகளையும் வெளிவாரிப் பாடநெறிகளில் சேர்த்துக் கொள்வதால் அதிக பயன் உண்டாகும்.

வடக்கு, கிழக்கில் உள்ள பல்கலைக் கழகங்கள், அவற்றின் நிர்வாகிகள், ஆசிரியர்கள அப்பிரதேசங்களின் நலன்களை முன் வைத்து உழைப்பது மிகவும் அவசியம். அதற்கான ஆர்வத்தை அவர்கள் கூட்டாக வளர்த்துக் கொண்டால் தமிழர் சமூகம் பல நன்மைகளை அடையும். தமிழர் பிரதேசங்களில் வளம் பெருகவும் வாழ்வு சிறக்கவும் இவர்கள் ஊன்றுகோல்களாக விளங்க வேண்டும் அப்போதுதான் அவர்கள் வெறும் கல்வித் துறைக்கு மட்டுமன்றி. மக்கள் சேவையும் ஆற்றிய பெருமையும் உண்டாகும்.

எதற்கும், பிரதேச நலனின் அக்கறை கொண்டதான கொள்கை இப்பல்கலைக்கழகங்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகச் சேர்க்கப்படுதல் அவசியம்.

இலங்கை இலக்கியப் பேரவை

## பரிசளிப்பு விழா

இலங்கை இலக்கியப் பேரவை பரிசளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி கைலாசபதி அரங்கில் நிகழவிருக்கிறது.

யாழ் இலக்கிய வட்டம் வருடாவருடம் நடத்தும் இப்பேரவை பரிசளிப்பு விழாவில் பின்வருவோர் பரிசில் பெற இருக்கிறார்கள்.

1. இலக்கிய ஆய்வு- சி. வன்னியகுலம்
2. நாவல் - சொக்கன்.
3. சிறுகதை - அ. செ. முருகானந்தம்.
4. காவியம் - காரை சுந்தரம்பிள்ளை. புலவர் பார்வதிநாதசிவம்
5. கவிதை - கல்வயல் குமாரசாமி.
6. நாடகம் - முருகையன்.
7. சிறுவர் இலக்கியம்- பா சத்தியசீலன்.

ஒவ்வொரு துறைக்கும் தலா ரூபா 1,000/- பரிசிலாக வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவின் பரிசளிப்புரையை பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

தொடக்கவுரையை பேராசிரியர் நா. பாலகிருஷ்ணனும், சிறப்புரையை மாநகரசபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிறட் அவர்களும் நிகழ்த்தவுள்ளனர்

பூமியதிர்ச்சிக்குள்ளான

# ஆர்மேனியாவில் உள்ள அணுமின் நிலயத்தை முடிவிட சோவியத் அரசாங்கம் முடிவு

## மாநில மக்களின் விருப்பம் ஏற்பு

மாஸ்கோ, டிச 13

பூமியதிர்ச்சிக்குள்ளான ஆர்மேனியா மாநிலத்தில் உள்ள ஒரே ஒரு அணுமின் நிலயத்தை இரண்டு ஆண்டுகளில் மூடி விடப்போவதாக சோவியத் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

மாநிலத் தலைநகரான யரவானில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் சோவியத் பிரதமர் நிக்கொலாய் ரிஷ்கோவ் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் இந்த அணுமின் நிலயத்துக்குச் சேதம் ஏற்படவில்லை.

என்றாலும் ஆர்மேனியா மாநில மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அணுமின் நிலயத்தை மூடிவிட அரசு தீர்மானித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் கட்டம் கட்டமாக நிலயத்தை மூடுவது இடம் பெறும்

ஆர்மேனியா மாநில மக்களின் நலன்கள் தான் எமக்கு முக்கியம்.

இப்படி திரு. ரிஷ்கோவ் தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் உள்ள செர்னோபில் அணு ஆலையில் ஏற்பட்ட கசிவு காரணமாக பலர் இறந்தனர் பலர் வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்மேனியா மக்களும் அணுமின் நிலயத்தை மூடிவிடும்படி வற்புறுத்தி வந்தனர். (எ)

## காஸா பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம்

டெல் அவிவ், டிச. 13

கைப்பற்றப்பட்ட காஸா அரபு பிரதேசத்தில் காலவரையறையின்றி ஊரடங்குச் சட்டத்தை இஸ்ரவேலிய அரசு நேற்றுப் பிறப்பித்தது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. பொதுச் சபைக்கூட்டத்தில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கலந்துகொள்ளும்போது இஸ்ரவேலிய படைகளுக்கு எதிரான தாக்குதலில் பலஸ்தீனியர் ஈடுபடலாம் என்று கருதியே இந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## கருத்து உடன்பாட்டுக்கு முதலிடம் என்கிறார் பெனுஸிர்

இஸ்லாமாபாத். டிச 13

இணக்கம் காணவேண்டும் என்பதற்காக நாட்டின் நலன்களை எனது அரசு பணயம் வைக்காது.

பிரதமர் பெனுஸிர் பூட்டோ நேற்று முன்தினம் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில்பேசுகையில முன்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதத்தில்பேசுகையில் அவர் "எந்தஒரு விஷயத்திலும் கருத்து உடன்பாடு கண்டபின்னரே எனது அரசு செயல்படுத்தும்"-என்று மேலும் தெரிவித்தார். (எ)

உலக நாடுகளிடையே

## புதிய அரசியல் சிந்தனை ஏற்பட்டுள்ளதாக சோவியத் பிரதமர் அறிவிப்பு

மாஸ்கோ, டிச 13

பூமியதிர்ச்சிக்குள்ளான ஆர்மேனியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து உதவிய உலகநாடுகளுக்கு சோவியத் யூனியன் அரசுநன்றி தெரிவித்துள்ளது.

புதிய அரசியல் சிந்தனை ஒன்று உலகில் உருவாகி வருவதை இச்செயல் காட்டுவதாக சோவியத் பிரதமர் நிக்கொலாய் ரிஷ்கோவ் தெரிவித்தார்.

உலகில் மனிதப்பண்பு வளர்ச்சியடைந்துள்ளதையும் உலகநாடுகளின் உதவும் மனப்பான்மை காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்,

செர்னோபில் அணுக் கசிவு விபத்து நடந்தபோது உலகநாடுகள் நடந்துகொண்ட விதத்துக்கு முற்றிலும் மாறுபட்டதாக இது அமைந்துள்ளது என்றும் பிரதமர் சொன்னார்.

இதனிடையில், நிவாரண உதவிகளில் ஈடுபட்ட இரண்டு விமானங்கள் விபத்துக்குள்ளானமை, நிவாரண வேலைகளை சீர்குலைக்காது என்று மாஸ்கோவில் அரசு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அதேவேளை — ஆர்மேனியாவுக்கு செல்லும் வானப்பிராந்தியம், விமானங்கள் மயமாகக் காட்சியளிப்பதாகவும், விமானப்போக்குவரத்து நெருக்கடிகளைச் சமாளிக்க விமானக் கட்டுப்பாட்டாளர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாஸ்கோவில் தெரிவிக்கப்பட்டது

ஒரு நாளில் 350க்கு மேல் விமானங்கள் ஆர்மேனியாவுக்குச் செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது. (எ)

## ஓவியங்கள் திருட்டு

லண்டன் டிச 13

நெதர்லந்து நாட்டில் உள்ள பிரபல ஓவியக் காட்சிச் சாலையில் இருந்து 10கோடி டாலர் மதிப்பு வாய்ந்த மூன்று 19 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் களவாடப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

வின்சன்ட் வின்கொக் என்ற புகழ்பெற்ற ஓவியரின் படைப்புக்கள் ஏராளமாக இந்த காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (எ)

## சத்வன் சிங்கின் மனு நிராகரிப்பு

புதுடில்லி, டிச 13

இந்திரா காந்தியை கொலை செய்த இரண்டு எதிரிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஒத்திவைக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் ஒன்று நிராகரிக்கப்பட்டது.

மற்றதன் மீது தீர்ப்பு வழங்குவது ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முதலாம்எதிரி சத்வன் சிங் தாக்கல் செய்த மனுவே நிராகரிக்கப்பட்டது. (ஒ-எ)

### வெளி உலகில்

## ஏழு வருடச் சிறை

லண்டன், டிச 13

முன்னாள் பிரிட்டிஷ் ஒலிம்பிக்வீரர் டேவிட் ஜென்கின் என்பவருக்கு அமெரிக்கா, கலிபோர்னியா மாநிலத்தில்உள்ள சாந்தியாகோ நகர நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

அனபொலிக் ஸ்டெரோயிட்போதை மருந்துகளை பெரும் தொகையில் கடத்தி விளையாட்டு வீரர்களுக்கு வழங்கியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இப்போதை மருந்து பாவித்ததற்காகத் தான் 100 மீட்டரில் ஒலிம்பிக்கில் வெற்றியீட்டிய தங்கப்பதக்கத்தை பென் ஜோன்ஸன் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# முன்னோடி ஆய்வுகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

"பல்கலைக்கழகத்தில் மாணவர் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆராய்ந்து கற்கவும் கட்டுரை வரையவும் வேண்டிய நிலை ஏற்படும். அதற்கான வழிகாட்டியாக அடிப்படையாகப் பாடசாலையில் மாணவர் முன்னோடி ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுகட்டுரைகளை வரையவேண்டும்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் வணிக மாணவர் மன்ற வெளியீடான "வணிகஜோதி" யின் 13ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் பொழுது யாழ். பல்கலைக்கழக நிதியாளரான திரு. கே. கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

இக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் இவ் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கல்லூரி வணிக மன்றத் தலைவர் செல்வன் சி. சுதாகரன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு. கனகரத்தினம் மேலும் தனது உரையில் "மாணவர்கள், ஆசிரியர்களின் கற்பித்தலை ஆதாரமாகக் கொண்டு அவர்களின் சாயலிலே கட்டுரைகளை எழுதுகின்றனர். மாணவர்கள் பொருத்தமான தலைப்பைத் தேர்ந்தெடுக்கவும் மேலதிக கருத்துக்களைத் தேடிச் சேர்க்கவும் ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக அமைய வேண்டும்" எனக் கூறினார்.

பிரதம விருந்தினரான திரு. சச்சிதானந்தம் தனது உரையில் "வணிக ஜோதி இக்கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் ஒளிவீசி வழி காட்டுகிறது" எனச் சொன்னார்

கல்லூரி அதிபர் திரு மு. இராமலிங்கம் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் முதல்தரப் பாடசாலைகளெனக் கருதப்படும் கல்லூரிகளுடன் எமது கல்லூரியும சரி நிகர் சமானமாக விளங்குகிறது" என்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி எஸ். மோகனதாஸ் பேசுகையில், "அறுபது ஆண்டுகளுக்கு முன் பெரியார் திரு ஆறுமுகம் கனகரத்தினம் என்ன நோக்கத்திற்காக இக் கல்லூரியை நிறுவினாரோ அந்த நோக்கத்துடன் கல்லூரி இன்று வீறு நடைபோடுகிறது"

திரு. வி. வி கே. பரமசாமி வெளியீட்டுரை ஆற்றினார்.

விரிவுரையாளர் திரு. எஸ். குமாரவேல், கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, ஆசிரியர் திரு. க. வை. தனேஸ்வரன், செல்வன் கே. ஏ முரளி, திரு மா. மரியதாஸ் ஆகியோரும் உரையாற்றினர். (ச)

## காணாமற்போன மாணவர்கள் முகாமில்

கொழும்பு டிச 14

காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் பின்னர் மொறட்டுவ இராணுவ முகமில் இருக்கக் கண்டு பிடிக்கப் பட்டனர்.

சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த சமயம் இராணுவத்தினர் அவர்களைக் கைது செய்திருந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் காணமற் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## பல்கலைக்கழக மாணவர் உபவேந்தர் கைதாகி விடுதலை!

கொழும்பு டிச 14

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்டனுடன் சென்று கொண்டிருந்த 4 பல்கலைக்கழக மாணவரும், பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அர்ஜுனா அலுவிஹாரவும் கடந்த புதன்கிழமை கண்டிப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அன்று மாலை அந்த 4 மாணவரையும், பிரிட்டிஷ் தூதர் கிளாட்ஸ்டனும், உபவேந்தர் அலுவிஹாரவும் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

கலஹா வீதியால் இரண்டு வாகனங்களில் வந்து கொண்டிருந்த இவர்கள் பொலீஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

4 மாணவர்களின் [illegible] கைது செய்யப்பட்ட பின்னர், [illegible] விடுவிக்கப்பட்டனர். (இ-எ)

## வாரத்தில் இரு நாட்கள்

மாங்குளத்தில் மரண விசாரணை அதிகாரி அலுவலகம் வாரத்தின் முதல திங்களும் இறுதி சனிக்கிழமையும் இரு தினங்கள் இயங்கி வருகின்றது.

மரண விசாரணை அதிகாரியாக திரு பரராச[illegible] பணி புரிகிறார். (இ-94)

# கல்வி அமைச்சுக்கு கஷ்டப் பிரதேச ஆசிரியர் படையெடுப்பு

கொழும்பு டிச 14

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் இருந்து இடம் பெயர விரும்பும் சுமார் 7 ஆயிரம் ஆசிரியர்கள் கொழும்பு கல்வி அமைச்சுக்குப் படையெடுத்துள்ளனர்

அம்பாறை திருகோணமலை, அனுராதபுரம், பொலன்னறுவ ஆகிய மாவட்டங்களில் உள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களே இப்படிப் படை எடுத்திருப்பதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது.

கல்வி அமைச்சுக் கட்டடத்தின் ஒரு பகுதியைப் பார்த்தால் கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் ஆஸ்பத்திரி போன்று காட்சி அளிக்கின்றதாம்.

சில ஆசிரியைகள் கட்டட மூலைகளில் அமர்ந்து இருந்து தங்கள் கைக் குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்டுவதையும் காணக்கூடியதாக உள்ளது கொழும்பில் தங்க இடமில்லாத ஆசிரியர்கள் அமைச்சுக் கட்டடத்திலேயே இரவுவேளைகளில் தங்கி விடுகின்றனராம்.

சில ஆசிரியர் 4 ஆயிரம் ரூபா கூட கொடுத்து கார்களை வாடகைக்கு அமர்த்தி கொழும்பு சென்றிருக்கின்றனர்.

# பாடசாலைகள் மாணவரை பரீட்சைக்கு தயார் செய்யும் தொழிற்சாலைகள் அல்ல

யாழ்ப்பாணம் டிச. 13

மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்பண்ணும் தொழிற்சாலையாகப் பாடசாலைகள் இயங்கக் கூடாது

கல்வியைப் பரீட்சைகளில் சித்திபெறுவதற்காக மட்டுமன்றி முழு வாழ்க்கையின் தேவைக்காகவும் எமது ஆசிரியர்கள் போதித்து வருகின்றனர்.

கொக்குவில் ஸ்ரீஞான பண்டிதவித்தியாலயத்தில் நடைபெற்ற சேவை நலம் பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு வித்தியாலய ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் திருமதி ச. சந்திரசேகரம் தலைமை வகித்தார்.

திரு சிவநாயகமூர்த்தி தனது உரையில் மேலும் கூறியதாவது!

ஒரு சமுதாயம் வளர வேண்டுமானால் நல்லாசிரியர்கள் கௌரவிக்கப் படவேண்டும்.

இப்பாடசாலையிலிருந்து மாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி பௌசியா, திருமதி ஸ்ரீதரன் ஆகியோர் இங்கு சிறந்த சேவை ஆற்றி உள்ளனர்.

இவர்களின் கல்வித் தொண்டை பாராட்டும் முகமாக இவ் விழா அமைந்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படி அவர் கூறினார்

வித்தியாலய அதிபர் திரு கா. கணேசதாசன் கனிஷ்ட அதிபர் திருமதி பு. இராஜேந்திரம். திரு வி பரமேஸ்வர சர்மா ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். (ச)

### சமய நிகழ்வுகளில்

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம், டிச 14

புங்குடுதீவு காட்டுப் புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயத்தில் திருவெம்பாவை விழா நாளை 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

24 ஆம் திகதி சனிக்கிழமை உதயத்தில் நடேசர் ஆருத்திரா தரிசனம் நடைபெறும்

ஆசிரியமணி திரு சி. க. நாகலிங்கம், ஆலய பரிபாலன சபை செயலர் திரு. த வடிவேலு ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (ச)

## இவர்கள் விடுதலையாகவில்லை

யாழ்ப்பாணம் டிச 14

கொழும்பு புதிய மகஸின் சிறைச் சாலையில் இருந்து கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுவிக்கப்பட்டோரில் கொலன்னாவை மத்திய தந்திக் கந்தோர் குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தண்டனை விதிக்கப்பட்டோர் அடங்கவில்லை

ஈ. பஞ்சலிங்கம், இராஜரத்தினம், கே கணபதிப்பிள்ளை ஆகியோர் விடுதலை செய்யப்பட்டவர்களில் அடங்கவில்லை. (இ)

## நிவாரணப் பணம் 2,000 ரூபா

அரசாங்க நிவாரணம் 2000 ரூபா மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையில் பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கு வழங்கப்பட்டது.

பாண்டியன் குளம் கிராமத்தில் 167 பேருக்கும் வவுனிக்குளம் கிராமத்தில் 89 பேருக்கும் முதற் கட்டமாக நிவாரணம் கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல் - ச

1988-12-19ஆம் திகதி நடைபெற இருக்கும் சனாதிபதித் தேர்தலின் பொழுது வாக்காளர்கள் வசதி கருதி கீழ் வரும் விபரங்களைத் தருகிறோம். இவற்றைக் கவனித்து அதன்படி உங்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்லவும்.

1982ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் பொழுது நீங்கள் வாக்களித்த நிலையத்தின் பெயர் அட்டவணை 1 லும் தற்போதைய சனாதிபதித் தேர்தலின் பொழுது நீங்கள் செல்ல வேண்டிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் அட்டவணை 2 லும் தரப்பட்டுள்ளது. அட்டவணை 1ல் நீங்கள் முன்பு வாக்களித்த நிலையத்திற்கு எதிராக தற்பொழுது நீங்கள் செல்ல வேண்டிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளது. இதைக் கவனித்து உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய வாக்கெடுப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

போதிய கால அவகாசமின்மையால் உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள் அனுப்பிவைக்க முடியவில்லை என்பதனை வருத்தத்துடன் அறியத்தருகிறோம். உங்கள் பெயர்கள் அடங்கிய 1987ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடு உங்கள் பிரிவுக்குரிய கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் கிராம சேவை அலுவலர் அலுவலகத்துக்குச் சென்று உங்கள் வாக்காளர் இலக்கத்தைக் குறித்துக்கொண்டு உங்கள் புதிய வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்லவும் இப்படிச் செய்தால் உங்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**ஆர். கே. சந்திரானந்த த சில்வா,**
தேர்தல் ஆணையாளர்

1988 டிசெம்பர் 06 ஆம் திகதி.

**தேர்தல் மாவட்டம் இல. 10 — யாழ்ப்பாணம்**
**வாக்கெடுப்பு பிரிவு "அ" — ஊர்காவற்றுறை**

## வாக்கெடுப்பு நிலையங்கள்

அட்டவணை - 1

1982 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் இலக்கமும் இடமும் பற்றிய விபரங்கள்:

அட்டவணை - 2

1988 ஆம் ஆண்டு டிசெம்பர் 19 ஆம் திகதி நிகழவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக தாபிக்கப்பட்ட புதிய வாக்கெடுப்பு நிலையங்களின் இலக்கமும், இடமும் பற்றிய விபரங்கள்:

| | அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|---|
| 1. | யா. நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம் | யா. நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 2. | யா. அபிவிருத்திச் சபை உப அலுவலகம், நெடுந்தீவு | யா. நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 3. | யா. நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாலயம். | யா. நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 4. | யா. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயம் | யா. நயினாதீவு மகாவித்தியாலயம் |
| 5. | யா. நயினாதீவு மகாவித்தியாலயம். | யா. நயினாதீவு மகாவித்தியாலயம் |
| 6. | யா. நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம். | யா. நயினாதீவு மகாவித்தியாலயம் |
| 7. | யா. புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம். | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 8. | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்.கலவன் பாடசாலை. | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 9. | யா. புங்குடுதீவு ஸ்ரீபராசக்தி வித்தியாலயம். | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 10. | யா. புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிசன்தமிழ்.கலவன் பாடசாலை. | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 11. | யா. புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 12. | யா. புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயம். | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 13. | யா. புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | யா. புங்குடுதீவு மேற்கு றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலை |
| 14. | யா. புங்குடுதீவு ராஜராஜேஸ்வரி வித்தியாலயம். | யா. புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம் |
| 15. | புங்குடுதீவு கிழக்கு மத்தி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் | யா. புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம் |
| 16 | யா. புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம். | யா. புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம் |
| 17. | யா. சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம் | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 18. | யா. வேலணை ஆத்திசூடி வித்தியாலயம் | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 19. | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 20. | யா. வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 21. | கலைமகள் சனசமூக நிலையம் வேலணை கிழக்கு. | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 22. | யா. வேலணை மேற்கு நடராசா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 23. | யா. வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் | யா. வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் |
| 24. | யா. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | யா. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| 25. | யா. மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | யா. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் |
| 26 | யா. மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம் | யா. மண்டைதீவு மகாவித்தியாலயம் |
| 27. | யா. மண்டைதீவு மகாவித்தியாலயம் | யா மண்டைதீவு மகாவித்தியாலயம் |
| 28. | யா. அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ். கலவன் பாடசாலை | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை |
| 29. | யா. அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ் வித்தியாலயம் | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. த. ம. பாடசாலை |
| 30, | யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை உப-அலுவலகம்,எழுவைதீவு | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. தமிழ். ம. பாடசாலை |
| 31. | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. த. ம. பாடசாலை |
| 32. | தீவுப்பகுதி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், ஊர்காவற்றுறை | யா. ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ. க. த. ம. பாடசாலை |
| 33. | யா. கரம்பன் சண்முகானந்த மகாவித்தியாலயம் | யா. கரம்பன் சண்முகானந்த மகாவித்தியாலயம் |
| 34. | யா. கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலயம் | யா. கரம்பன் சண்முகானந்த மகாவித்தியாலயம் |
| 35. | யா. தம்பாட்டி அரசினர் தமிழ் வித்தியாலயம், ஊர்காவற்றுறை | யா. நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ். கலவன் பாடசாலை ஊர்காவற்றுறை. |
| 36. | யா. நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ். கலவன் பாடசாலை, ஊர்காவற்றுறை | யா. நாரந்தனை றோமன் க த. பாடசாலை ஊர்காவற்றுறை |
| 37. | புளியங்கூடல் நெசவு நிலையம் | யா. நரந்தனை றோமன் க த. க. பாடசாலை, ஊர்காவற்றுறை |
| 38. | சுருவில் கிராம முன்னேற்றச் சங்க, சனசமூக நிலைய மண்டபம் | யா. நாரந்தனை றோமன் க த. க. பாடசாலை, ஊர்காவற்றுறை |

| | அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|---|
| 30 | யா. பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 31. | யா. சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம், | யா. |
| 32. | யா. சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம் | யா. |
| 33. | யா. சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 34. | ஆண்கள் கிராம முன்னேற்றச் சங்க மண்டபம், பண்ணாகம் தெற்கு | யா. |
| 35. | யா. சித்தன்கேணி கணேச வித்தியாலயம் | யா. |
| 36. | யா. பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 37. | யா. விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம். | யா. |
| 38. | யா. திருவடிநிலை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 39. | யா. சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம் | யா. |
| 40. | யா. சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம் | யா. |
| 41. | யா. மூளாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 42 | யா. பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயம் | யா. |
| 43. | யா. தொல்புரம் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. |
| 44. | யா. தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம் | யா. |

**வாக்கெடுப்பு பிரிவு "ஆ" வட்டுக்கோட்டை**

| | அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|---|
| 1. | யா. வியாவில் சைவ தமிழ்க் கலவன் பாடசாலை. | யா. யாழ்ரன் கல்லூரி, காரைநகர் |
| 2. | யா வேரப்பிட்டி ஸ்ரீகணேச வித்தியாலயம் | யா. யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 3. | யா. யாழ்ரன் கல்லூரி, காரைநகர் | யா. யாழ்ரன் கல்லூரி, காரைநகர் |
| 4. | யா. காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம் | யா. யாழ்ரன் கல்லூரி காரைநகர் |
| 5. | யா. காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம் | யா. யாழ்ரன் கல்லூரி, காரைநகர் |
| 6 | நீலிப்பந்தனை நெசவுநிலையம், காரைநகர் | யா. காரைநகர் இலகடி சைவ தமிழ்க் கலவன் பாடசாலை |
| 7. | யா. காரைநகர் இலகடி சைவ தமிழ்க் கலவன் பாடசாலை | யா. காரைநகர் இலகடி சைவ தமிழ்க் கலவன் பாடசாலை |
| 8. | யா. காரைநகர் இந்துக் கல்லூரி | யா. காரைநகர் இந்துக் கல்லூரி |
| 9. | யா. காரைநகர் இந்துக் கல்லூரி, நடராசா மண்டபம் | யா. காரைநகர் இந்துக் கல்லூரி |
| 10. | யா. காரைநகர் கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. காரைநகர் இந்துக் கல்லூரி |
| 11. | யா. பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா. பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை |
| 12. | யா. தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயம், காரைநகர் | யா. பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை |
| 13. | கிராம முன்னேற்றச் சங்க மண்டபம், அராலி தெற்கும் கிழக்கும் | யா. அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் |
| 14. | யா. அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் | யா. அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் |
| 15. | யா. அராலி முருகமூர்த்தி வித்தியாலயம் | யா. அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் |
| 16. | யா. அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம் | யா. அராலி இந்துக் கல்லூரி |
| 17. | யா. அராலி இந்துக் கல்லூரி. | யா. அராலி இந்துக் கல்லூரி |
| 18. | யா. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆரம்பப்பிரிவு | யா. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| 19: | யா. சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம் | யா. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| 20. | யா. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | யா. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| 21 | யா. பிளாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 22. | யா. யாழ்ப்பாணக் கல்லூரி. | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 23. | யா. வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயம் | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 24. | யா. வட்டுக்கோட்டை மேற்கு சுப்பிரமணிய வித்தியாலயம் | யா. யாழ்ப்பாணக் கல்லூரி |
| 25. | யா. சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் |
| 26. | சங்கானை பெண்கள் கிராம முன்னேற்றச் சங்க நெசவு நிலையம் | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் |
| 27. | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (ஆண் வாக்காளர்கள்) | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (ஆண் வாக்காளர்) |
| | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (பெண் வாக்காளர்கள்) | யா. சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் (பெண் வாக்காளர்கள்) |
| 28 | யா. பிராம்பத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி |
| 29. | யா. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி | யா. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி |

**வாக்கெடுப்பு பிரிவு "இ"**

| | அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|---|
| 1. | யா / மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் மகளிர் பாடசாலை | மாத |
| 2. | யா / மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம் | மாத |
| 3. | யா / மாதகல் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | மாத |
| 4: | யா / பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (ஆண் வாக்காளர்) | யா. |
| | யா / பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (பெண் வாக்காளர்) | யா. |
| 5. | யா / சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் | யா. |
| 6. | யா / இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை | யா. |
| 7. | யா / மாரீசன்கூடல் சுப்பிரமணியம் வித்தியாலயம் | யா. |
| 8. | யா / அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் | யா. |
| 9. | யா / அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி | யா. |
| 10. | யா / அளவெட்டி சதானந்த வித்தியாலயம் | யா. |
| 11. | யா / அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம் | யா. |
| 12. | அளகொல்லை பிள்ளையார் கோவில் மடம் | யா. |
| 13. | மகாஜன சபை மண்டபம், அளவெட்டி வடக்கு | யா. |
| 14 | யா / மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் | யா. ப |
| 15. | யா / மல்லாகம் மகாவித்தியாலயம் | யா. ப |
| 16. | யா / மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் | யா. ப |
| 17. | யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் | யா. இ |
| 18. | யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் | யா. இ |
| 19 | யா / கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் | யா / ப |
| 20. | யா / பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் | யா / ப |
| 21. | யா / தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் | யா / யூ |
| 22. | யா / கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் | யா / யூ |
| 23. | யா / குளமன்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | யா / யூ |
| 24. | யா / மகாஜன கல்லூரி, தெல்லிப்பளை | யா / யூ |
| 25. | யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை | யா / யூ |
| 26: | மாவை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபம் | யா / |
| 27. | யா / கொல்லன்கலட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை | யா / |
| 28 | யா / வீமன்காமம் மகாவித்தியாலயம் | யா / |
| 29. | யா / நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் | யா / |
| 30: | யா / காங்கேசன்துறை சிங்கள கனிஷ்ட வித்தியாலயம் | யா / |
| 31. | யா / நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை | யா / |
| 32. | யா / தையிட்டி சிவகுருநாத வித்தியாலயம் | யா / |
| 33. | யா / தையிட்டி கணேச வித்தியாலயம் | யா / |
| 34. | புதிய நெசவு நிலையம் மயிலிட்டிக்கரை | யா / |
| 35. | யா / மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை | யா / |
| 36. | யா / குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம் | யா / |
| 37. | யா / குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம் | யா / |
| 38. | யா / மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம் | யா / |
| 39. | யாழ்ப்பாண அபிவிருத்திச்சபை உப-அலுவலகம், மயிலிட்டி | யா / |
| 40. | யா / பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் (ஆண்வாக்காளர்) | பலா |
| | யா / பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் (பெண்வாக்காளர்) | பலா |
| 41. | யா / பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | பலா |
| 42· | யா / வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் | யா / |
| 43. | வீமன்காமம் இளைஞர் சங்க மண்டபம் | யா / |
| 44. | வீமன்காமம் இளைஞர் சங்கமண்டபம் | யா / |
| 45. | யா / ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் த. க. பாடசாலை | யா / |

**வாக்கெடுப்பு பிரிவு "ஈ"**

| | அட்டவணை - 1 | அட்டவணை - 2 |
|---|---|---|
| 1. | சுதுமலை மத்திய சனசமூக நிலையமும் வாசிகசாலையும் | யா / |
| 2. | யா / சுதுமலை சின்மைய பாரதி வித்தியாலயம் | யா / |
| 3. | யா / மானிப்பாய் புனித ஆன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | யா / |
| 4. | யா / ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, உயரப்புலம் | யா / |
| 5. | யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, கூளாவடி | யா / |
| 6. | யா / ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம் | யா / |
| 7. | மகாஜன சனசமூக நிலையம், மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை | யா. |
| 8. | யா / நவாலி அட்டகிரி வித்தியாலயம் | யா. |
| 9. | யா / நவாலி ஸ்தான அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை | யா. |
| 10. | யா / நவாலி மகா வித்தியாலயம் | யா. |
| 11. | யா / நவாலி புனித பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | யா. |
| 12 | யா / சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை | யா. |
| 13 | யா / சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் (பிரதான பாடசாலை) | யா. |
| 14 | யா / சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் (முன்னைய அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை) | யா. |
| 15 | மகியப்பிட்டிச் சந்தை | யா. |
| 16 | யா / கட்டுடை சைவ வித்தியாலயம் | யா. |
| 17 | மா / மானிப்பாய் ஞாபகார்த்த ஆங்கிலப் பாடசாலை | யா. |
| 18 | யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி | யா / |
| 19 | யா / திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம் | யா / |
| 20 | யா / சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம் | யா / |
| 21 | யா / சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம் | யா / |
| 22 | யா / சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | யா / |
| 23 | யா / சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் | யா / |
| 24 | யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம் | யா / |
| 25 | கமநல சேவை நிலையம், உடுவில் | யா / |
| 26 | யா / உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை | யா / |
| 27 | யா / உடுவில் மகளிர் கல்லூரி | யா / |
| 28 | யா / உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் | யா / |
| 29 | யா / உடுவில் மல்வத்தை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை | யா / |
| 30 | யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகம் [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சனாதிபதித் தேர்தல் - 1988

யா. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
யா. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி
யா. சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்
யா. சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்
யா. சித்தன்கேணி கணேச வித்தியாலயம்
யா. சித்தன்கேணி கணேச வித்தியாலயம்
யா. சித்தன்கேணி கணேச வித்தியாலயம்
யா. விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
யா. விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
யா. விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
யா. விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
யா. மூளாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை
யா. மூளாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை
யா. தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்
யா. தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்

## ...வு "இ" காங்கேசன்துறை

மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம்
மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம்
மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம்
யா. பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (ஆண் வாக்காளர்)
யா. பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை (பெண் வாக்காளர்)
யா. பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
யா. இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை
யா. இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை
யா. அருணோதயா கல்லூரி. அளவெட்டி
யா. அருணோதயா கல்லூரி, அளவெட்டி
யா. அருணோதயா கல்லூரி, அளவெட்டி
யா. அருணோதயா கல்லூரி, அளவெட்டி
யா. அருணோதயா கல்லூரி, அளவெட்டி
யா. அருணோதயா கல்லூரி, அளவெட்டி
யா. மல்லாகம் மகா வித்தியாலயம்
யா. மல்லாகம் மகாவித்தியாலயம்
யா. மல்லாகம் மகா வித்தியாலயம்
யா. இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்
யா. இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
யா / பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்
யா / பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா / யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
யா / வீமன் காமம் மகாவித்தியாலயம்
யா / வீமன்காமம் மகா வித்தியாலயம்
யா / வீமன்காமம் மகா வித்தியாலயம்
யா / நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை
யா / நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை
யா / நடேஸ்வராக் கல்லூரி. காங்கேசன்துறை
யா / தையிட்டி கணேச வித்தியாலயம்
யா / தையிட்டி கணேச வித்தியாலயம்
யா / தையிட்டி கணேச வித்தியாலயம்
யா / குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம்
யா / குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம்
யா / குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம்
யா / மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம்
யா / மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம்
பலாலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்
பலாலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்
பலாலி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம்
யா / வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்
யா / வசாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்
யா / ஏழாலை வடக்கு அமெரிக்கமிஷன் தமிழ் கலவன் பாடசாலை
யா / ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன்பாடசாலை

## பிரிவு "ஈ" மானிப்பாய்

யா / மானிப்பாய் புனித ஆன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
யா / மானிப்பாய் புனித ஆன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
யா / மானிப்பாய் புனித ஆன் றோ. க. தமிழ் கலவன் பாடசாலை
யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, கூளாவடி
யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, கூளாவடி
யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, கூளாவடி
யா / ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, கூளாவடி
யா. நவாலி மகா வித்தியாலயம்
யா. நவாலி மகா வித்தியாலயம்
யா. நவாலி மகா வித்தியாலயம்
யா. நவாலி மகா வித்தியாலயம்
யா. சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை
யா. சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
யா. சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்
யா. சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை
யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி
யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி
யா. மானிப்பாய் இந்துக் கல்லூரி
யா / சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம்
யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்
யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்
யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்
யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்

| | | |
|---|---|---|
| 31 | யா / சங்குவேலி தமிழ்க் கலவன் பாடசாலை | யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் |
| 32 | இணுவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 33. | யா / இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 34. | யா / இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 35. | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் | யா / இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயம் |
| 36. | யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை |
| 37. | தாவடி சைவ இளைஞர் சங்கம் | யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை |
| 38. | யா / ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 39. | யா / ஏழாலை முருகன் வித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 40. | யா / ஏழாலை தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 41. | யா / ஏழாலை மகா வித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
| 42. | யா / ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் | யா / ஏழாலை மகா வித்தியாலயம் |
